# தென் மாகாண சபை

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

**(அ) மாகாண சபை நிதியக் கணக்கு**

மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியக் கணக்கு 2012 மார்ச் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

**(ஆ) ஏனைய கணக்குகள்**

மீளாய்வாண்டிற்காக 2012 ஏப்ரல் 30 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தலின் செயல்முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

**2012 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு**

| | கணக்கு | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப் படாத கணக்குகளின் எண்ணிக்கை | முன்னைய ஆண்டு கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 26 | 25 | 01 | - |
| (ii) | வருமானக் கணக்குகள் | 01 | 01 | - | - |
| (iii) | மாகாண சபை அலுவலர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 90 | 81 | 09 | - |
| (iv) | வாணிப முற்பணக் கணக்குகள் | 11 | 05 | 06 | - |
| (v) | நிதியக் கணக்குகள் | 06 | 05 | 01 | 01 |
| (vi) | நியதிச் சட்டக் கணக்குகள் | 05 | 03 | 02 | - |
| (viii) | சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று | 01 | 01 | - | - |
| | | 140 | 121 | 19 | 01 |

### 1.1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களினால் நிதிக்கூற்றுக்களுக்கு எழும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களிலிருந்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தென் மாகாண சபை நிதியக் கணக்குகளின் நிதிசார் நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயற்பாடுகளையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் பிரகாரம் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது அபிப்பிராயமாகும்.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

08 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதியக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் ரூபா 162,560,662 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் துணை அறிக்கைகளின் பிரகாரம் மீதிகள் ரூபா 167,674,881 கூட்டுமொத்தமாக இருந்தது.

### 1.2.2 வங்கி கணக்கிணக்கம்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 05 நிறுவனங்களுக்கான 06 மாதங்களை மிகைத்திருந்த தேறப்படாத வைப்புக்கள் ரூபா 5,011,831 தொடர்பாக வங்கியில் விசாரணை செய்து பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 05 வங்கி கணக்குகளுக்கான இனங்காணப்படாத வரவு ரூபா 2,802,225 ஆக இருந்தது.

### 1.2.3 செலுத்தவேண்டிய கணக்குகள்

01 ஆண்டு காலத்தினை மிகைத்திருந்த செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,543,543 ஆக இருந்தது.

### 1.2.4 கட்டுநிதிக் கணக்குகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாத ரூபா 23,948,319 தொகையான கட்டுநிதி வரவு மீதி காணப்பட்டது.

### 1.2.5 பொதுவைப்புக் கணக்குகள்

நிதிப்பிரமாணம் 571 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கக்கூடியாக இருந்தும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாத 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டுகள் காலத்தினை மிகைத்திருந்த பொது வைப்புக்களின் பெறுமதி ரூபா 37,272,209 ஆக இருந்தது.

### 1.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 118 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அதில் 68 கணக்காய்வு ஐயவினாக்களின் கணிப்பிடக்கூடிய பெறுமதி ரூபா 285,185,740 ஆக இருந்தது.

#### (ஆ) தகவல்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையின் காரணமாக ரூபா 296,190,154 கூட்டுமொத்தமான கொடுக்கல்வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தில் ரூபா 133,301,763 தொகையான பற்றாக்குறை காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 319,770,185 ஆக இருந்தது.

## 2.2 வருமானங்களும் செலவுகளும்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பான பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| விபரம் | 2011 பாதீடு செய்யப்பட்டவை ரூபா. | 2011 உள்ளபடியானவை ரூபா. | 2011 முரண் ரூபா. | 2011 முரண்பாடு சதவீதமாக % | 2010 பாதீடு செய்யப்பட்டவை ரூபா. | 2010 உள்ளபடியானவை ரூபா. | 2010 முரண் ரூபா. | 2010 முரண்பாடு சதவீதமாக % |
|---|---|---|---|---|---|---|---|---|
| **மாகாணசபை விடயங்களுக்கான வருமானம்** | | | | | | | | |
| வரி வருமானம் | 958,760,000 | 3,704,705,988 | 2,745,945,988 | 286 | 2,680,000,000 | 2,532,157,291 | (147,842,709) | (5.52) |
| வரியல்லா வருமானங்கள் | 935,240,000 | 569,924,269 | (365,315,731) | (39) | 1,030,000,000 | 520,489,536 | (509,510,464) | (49.46) |
| அரசாங்க மானியம் | 14,643,250,00 | 13,335,535,508 | (1,307,714,492) | (9) | 13,478,350,000 | 12,485,956,169 | (992,393,831) | (7.36) |
| ஏனைய உதவி | - | 691,145,821 | 691,145,821 | 100 | - | 743,679,552 | 743,679,552 | 100 |
| | 16,537,250,000 | 18,301,311,586 | 1,764,061,586 | | 17,188,350,000 | 16,282,282,548 | 906,067,452 | |
| **மீண்டுவரும் செலவுகள்** | | | | | | | | |
| ஆளணி வேதனம் | 13,346,614,545 | 12,658,911,497 | 687,703,048 | 95 | 10,879,794,000 | 8,196,595,492 | 2,683,198,508 | 24.66 |
| ஏனையவை | 3,142,629,932 | 3,022,100,616 | 120,529,316 | 96 | 3,366,804,000 | 5,538,840,102 | (2,172,036,102) | (64.51) |
| உப மொத்தம் | 16,489,244,477 | 15,681,012,113 | 808,232,364 | 95 | 14,246,598,000 | 13,735,435,594 | 511,162,406 | 3.58 |
| மூலதனச் செலவுகள் | 2,463,325,599 | 2,120,854,060 | 342,471,539 | 86 | 2,969,459,000 | 2,848,446,045 | 121,012,955 | 4.08 |
| கூட்டு மொத்தம் | 18,952,570,076 | 17,801,866,173 | 1,150,703,903 | 94 | 17,216,057,000 | 16,583,881,639 | 632,175,361 | 3.67 |

## 2.3 வருமான நிருவாகம்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் கடந்த 03 ஆண்டுகளில் அந்த ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டு 2011 | ஆண்டு 2010 | ஆண்டு 2009 | மொத்தம் |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வரி வருமானம் | 379,214,474 | 148,695,113 | 122,870,002 | 650,779,589 |
| வரி அல்லாத ருமானம் | 327,990,122 | 59,436,927 | 267,443,397 | 654,870,446 |
| | 707,204,596 | 208,132,040 | 390,313,399 | 1,305,650,035 |

## 2.4 முற்பணக் கணக்குகளின் எல்லைகளைப் பின்பற்றாமை

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 503 மற்றும் தென் மாகாண சபை நிதி விதிக் கோவையின் விதி 369 கட்டளைகளுக்கு முரணாக முற்பணக் கணக்கு விடய இலக்கம் 30801 இலுள்ள வரவு மீதிகளின் உச்ச எல்லை ரூபா 1,582,950 இனால் மிகைத்திருந்ததுடன், விடய இலக்கம் 31801 இலுள்ள பெறுவனவுகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 268,955 இனால் வீழ்ச்சியுற்றிருந்தது.

## 2.5 தொழிற்பாட்டு நட்டம்

05 வணிக முற்பணக் கணக்குகள் கடந்த 04 ஆண்டுகளின் போது அடிக்கடி தொழிற்பாட்டு நட்டத்தினை அறிவித்திருந்தது. தென் மாகாண நிதி விதிக் கோவையின் விதி 379 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கூறிய தொழிற்பாட்டு நட்டத்தை உள்ளடக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் முற்பணக்கணக்குகளை நட்டத்துடன் பேணிவரும் பொருளாதார மற்றும் சமூக நியாயத்தன்மை தொடர்பாக முகாமைத்துவத்தினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.6 மனித வள முகாமைத்துவம்

### 2.6.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி

2011 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தென் மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன..

**(அ) மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்கள்**

| | அங்கீகரிக்கப் பட்டவை | உள்ளபடி யானவை | வெற்றிடம் |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 1,335 | 1,186 | 149 |
| மூன்றாம் நிலை | 1,887 | 1,881 | 06 |
| இரண்டாம் நிலை | 5,417 | 4,662 | 755 |
| ஆரம்ப நிலை | 4,011 | 3,346 | 665 |
| மொத்தம் | 12,650 | 11,075 | 1,575 |

**(ஆ) பாடசாலை பதவியணியினர்**

| | அங்கீகரிக்கப் பட்டவை | உள்ளபடி யானவை | வெற்றிடம் |
|---|---|---|---|
| அதிபர் | 1,301 | 670 | 631 |
| ஆசிரியர்கள் | 23,904 | 22,543 | 1,361 |
| ஏனையவர்கள் | 1,611 | 1,186 | 425 |
| | 26,816 | 24,399 | 2,417 |

(i) தங்காலை வலயத்தில் அமைந்துள்ள 73 பாடசாலைகளில் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 13 பாடங்கள் தொடர்பாக 77 ஆசிரியர்கள் பற்றாக்குறையும் 57 பாடசாலைகளில் 14 பாடங்கள் தொடர்பாக 63 ஆசிரியர்களின் மிகைகளும் காணப்பட்டன.

(ii) வலஸ்முல்லை வலயத்தைச் சார்ந்த பாடசாலைகளில் 2012 சனவரி 24 ஆந் திகதியில் உள்ளவாறு பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம் 43 பாடசாலைகளில் மிகையான ஆசிரியர் எண்ணிக்கை 84 ஆக இருந்ததுடன் 13 பாடசாலைகளில் பற்றாக்குறையான ஆசிரியர்களின் எண்ணிக்கை 17 ஆக இருந்தது.

## 2.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.7.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட பௌதீக வளங்கள்

சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்துக்களின் தன்மை | எண்ணிக்கை | பெறுமதி | பயன்படுத்தாது காணப்பட்ட காலம் (ஆண்டு) |
|---|---|---|---|---|
| (அ) | காணிகள் | 02 | 550,000 | 1-3 |
| (ஆ) | கட்டிடங்கள் | 27 | 15,913,015 | 1-6 |
| (இ) | இயந்திரங்கள் | 1,222 | 4,203,168 | 1-8 |
| (ஈ) | வாகனம் | 19 | - | 2-6 |
| (உ) | ஏனைய சொத்துக்கள் | 43 | 195,000 | 1-3 |

### 2.7.2 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் மற்றும் மாகாண சபைகள் நிதி விதி 476 இன் பிரகாரம் 05 மாகாண சபை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மீளாய்வாண்டிற்கு பொருள் மெய்மையாய்வை நடாத்தியிருக்கவில்லை.

### 2.7.3 பெறவேண்டிய கணக்குகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டி இருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 87,894,938 ஆக இருந்ததுடன் ஒரு ஆண்டு காலத்தினை மிகைத்திருந்த கணக்கு மீதிகள் ரூபா 60,344,163 கூட்டுமொத்தமாக இருந்தது.

### 2.7.4 அறவிடவேண்டியுள்ள பதவியினர் கடன்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த பதவியினர் கடன் முற்பண மீதிகள் ரூபா 685,365,289 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் 01 ஆண்டு காலத்துக்கு மிகையாக அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட கணக்கு மீதிகள் ரூபா 70,142,733 கூட்டுமொத்தமாக இருந்தது.

### 2.8 வாகனப் பயன்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் மூன்று மாவட்டங்கள் தொடர்பான வாகன விபத்துக்களில் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இறுதி நடவடிக்கைகள் எடுக்கப்படாத வாகன விபத்துக்கள் 116 ஆக இருந்தன. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 18 வாகனங்கள் தொடர்பான தொடக்க அறிக்கை சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் சுனாமியால் அழிவுற்றிருந்த 10 வாகனங்கள் தொடர்பான இறுதிச் செயற்பாடுகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.
- 28 வாகனங்கள் தொடர்பான நட்டங்களை மதிப்பீடு செய்தல் இடம்பெறாதிருந்ததுடன் சில வாகனங்கள் விபத்துக்குள்ளாகி 18 ஆண்டுகளுக்கு அதிகமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மாத்தறை பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு 04 வாகனங்கள் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அலுவலகத்தின் அம்பியூலன்ஸ் வாகனம் 2009 ஏப்ரல் மாதம் 11 ஆந் திகதியும் இன்னுமொரு அம்பியூலன்ஸ் வாகனம் 2010 ஆகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி விபத்திற்குள்ளாகியிருந்தது. அவ் வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக முறையே ரூபா 137,736 மற்றும் ரூபா 133,045 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே விபத்திற்குள்ளாகிய இரண்டு கெப்வாகனங்கள் மற்றும் ஒரு அம்பியூலன்ஸ் வாகனத்திற்காக நிதிப் பிரமாணம் 104 (4) இன் பிரகாரம் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பலப்பிட்டிய வைத்தியசாலையின் ஒரு 2008 யூலை 18 ஆந் திகதி விபத்திற்குள்ளாகியிருந்ததுடன் விபத்தின் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 658,183 ஆக இருந்தது. உரிய வாகனம் காப்புறுதி செய்யப்படாததன் காரணமாக விபத்தினால் ஏற்பட்ட நட்டத்தினை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே 2011 மார்ச் 24 ஆந் திகதி பழுதுபார்ப்பதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்த உரிய வாகனம் 2011 வரை திசெம்பர் பழுதுபார்க்கப்பட்டு மீளப்பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(ஈ) பிரதான செயலகத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட இரண்டு வாகனங்கள் 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் விபத்திற்குள்ளாகியிருந்தது. அந்த இரண்டு வாகனங்களுக்கு ஏற்பட்ட நட்டத்தின் பெறுமதி ரூபா 1,426,900 ஆக இருந்தது. எனினும் இவ் இரண்டு வாகனங்களுக்கு ஏற்பட்ட இந் நட்டம் தொடர்பான ஆரம்ப விசாரணைகள் 2011 திசெம்பர் 31 பேணப்படாதிருந்ததுடன் மாகாண சபை நிதி விதி 54.4 இன் பிரகாரம் ஆரம்ப அல்லது முழுமையான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஒரு வாகனத்திற்கான காப்புறுதி இழப்பீடாத ரூபா 319,477 தொகை கிடைத்திருந்ததுடன் ஏனைய வாகனத்தின் காப்புறுதி இழப்பீட்டினைச் செலுத்துவதற்கான புதுப்பித்தல் செலவுகளுக்குரிய தொடக்கப்பட்டியல்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக 2011 யூன் 23 ஆந் திகதி காப்புறுதிக் கம்பனியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும் அதற்காக எதுவித பதிலும் 2011 திசெம்பர் 31 வரை தெரிவிக்கப்பட்டிருந்ததன் காரணமாக அவ் விபத்தில் ஏற்பட்ட மொத்த நட்டமாகிய ரூபா 1,049,680 தொகை சபை நிதியத்திற்கு ஒரு நட்டமாக அவதானிக்கப்படுகின்றது.

(உ) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 1998 செப்தெம்பர் 14 ஆந் திகதி விபத்துக்குள்ளாகிய கெப் வாகனத்திற்காக காப்புறுதி இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் உரிய காலத்திற்குள் நடவடிக்கை எடுக்காததன் காரணமாக முழுமையான இழப்பீட்டுத் தொகையாக காப்புறுதி நிறுவனம் மதிப்பீடு செய்த ரூபா 300,000 தொகையினை பெற்றுக்கொள்ளவும் முடியாதிருந்தது. இவ் வாகனம் பழுதுபார்க்கப்படாது 2011 ஒக்டோபர் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரை 13 ஆண்டுகளாக திஸ்ஸ உடுகாவ இயந்திரப் பிரிவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(ஊ) (i) பிரதிப் பிரதான செயலாளர் (திட்டமிடல்) அலுவலகத்தின் கெப் வாகனம் 2009 ஏப்ரல் 10 ஆந் திகதி மற்றும் 2010 ஏப்ரல் 11 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியிருந்தும் அது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இந்த விபத்தினை உள்ளடக்கும் வகையில் 2011 ஒக்தோபர் 16 ஆந் திகதி கேட்பு மனுக்களைக் கோரி வாகனம் ரூபா 1,625,000

தொகைக்கு பழுதுபார்க்கப்பட்டிருந்ததுடன் அதற்காக இழப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) தென் மாகாண விவசாய அமைச்சு தென் மாகாண நிதி விதி 422.1 (ஆ) இன் பிரகாரம் வழங்கல் மற்றும் சேவைக்காக பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேட்பு மனுக்கள் கோரப்பட்டதன் பின்னர் கொள்வனவு நடவடிக்கை இடம்பெறவேண்டிய போதிலும் மோட்டார் வாகனத்திற்காக ரூபா 2,376,916 பெறுமதியான பழுதுபார்த்தல் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் ஐந்து சந்தர்ப்பங்களில் பழுதுபார்த்தல்களின் பின்னர் கேள்விகளுக்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டதுடன் அங்கீகரிக்கப்படாத பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 2.9 இனங்காணப்பட்ட நட்டங்களும் சேதங்களும்

---

தெரிவுக்கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்களும் சேதங்களும் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) நெளுவ கிராமிய வைத்தியசாலையின் இரண்டு மாடிக்கட்டிடத்தினைச் சுற்றியுள்ள பக்கச் சுவர்கள் சேதமடைந்து நிலைமையின் அடிப்படையில் 2008 ஆம் ஆண்டிலிருந்து கைவிடப்பட்டிருந்ததுடன் 2012 மார்ச் மாத கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரை

(i) அக்கட்டிடத்தில் காணப்பட்ட மருந்துகள், சிகிச்சை உபகரணங்கள் ஆகிய அனைத்து பொருட்களும் கைவிடப்பட்டிருந்தன.

(ii) 1999-2009 ஆண்டுகள் வரை காலாவதியான மருந்துகள் காணப்பட்டதுடன் அவற்றை பௌதீகரீதியாக பரிசோதனை செய்வதற்கு முடியாத அளவு பாரிய இருப்பாக இருந்தது.

(iii) காலாவதியாவதற்கு அண்மித்த மருந்துகள் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளைப் பின்பற்றி அவை வறிதாக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரை அவற்றை அழிப்பதற்கு குழு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதன்போது பின்பற்றப்பட வேண்டிய முறையான நடைமுறைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) இந்த மருந்துகளில் ஒரு பகுதி வைத்தியசாலை காணியிலுள்ள உத்தியோகபூர்வ விடுதிகளில் வைத்திருக்கப்பட்டிருந்தது.

(vi) 10 ஆண்டுகள் அளவான காலமாக உத்தியோகத்தர்கள் மாற்றம் பெறும் சந்தர்ப்பங்களின் போது பட்டோலைப் பொருட்களை ஒப்படைக்கும் மற்றும் பொறுப்பேற்கும் முறைப்படியான வேலைத்திட்டமும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. பல ஆண்டுகளாக இருப்பு பதிவேடு சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெலியத்த ஆயுர்வேத வைத்தியசாலையில் மருந்து உற்பத்திச் சாலையிலுள்ள மருந்து இருப்புக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது 133.855 கிலோகிறாம் மருந்துகளின் பற்றாக்குறையும் அதேபோல் 17.97 கிறாம் மருந்துகளின் மிகையும் வெளிப்படுத்தப்பட்டன. மேலும் பற்றாக்குறையின் பெறுமதி ரூபா 37,877 இற்கு அண்மித்ததாக இருந்தது. அவ்வாறே 6,007 கிலோகிறாம் காய்ந்த மருந்துகள் அங்கீகரிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு கொள்வனவு செய்ததன் காரணமாக ஆயுர்வேத திணைக்களத்திற்கு ஏற்பட்ட நிதி நட்டம் ரூபா 654,784 ஆக இருந்த போதிலும் இது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் வைத்தியசாலை உத்தியோகத்தர்களால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஹங்கம கலமெடிய வீதியில் 2008 யூலை 25 ஆந் திகதி நிர்மாணிக்கப்பட்ட மதகு முறையான தரத்தில் நிர்மாணிக்கப்படாதும் உரிய தரத்திலான கம்பிகளைப் பயன்படுத்தியிராமையாலும் முழுமையாக வெடித்துள்ளது என ஆய்வுகூடப் பொறியியலாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தும் இதன்முலம் அதிகாரசபைக்கான நிதி நட்டத்தினை பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கோ அல்லது உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கோ 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்காக கணக்காய்வுத் திகதியான 2009 நவம்பர் 18 ஆந் திகதி ரூபா 2,551,998 தொகை ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) தாபன விதிக்கோவையின் XXXIII ஆம் அத்தியாயத்தின் 7.1 ஆம் பிரிவின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட முறையான அங்கீகாரமின்றி தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு எதிராக உத்தியோகத்தர்களினால் தொடுக்கப்பட்ட வழக்கு உரிய

உத்தியோகத்தர்களினால் பின்னர் விலக்கிக் கொள்ளப்பட்டிருந்ததுடன் இந்த வழக்கிற்காக அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,278,000 தொகையான வழக்கு கட்டணத்தை உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் 2006 ஆம் ஆண்டின் போது ரூபா 9,660,000 தொகை செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த தார் தெளிக்கும் இயந்திரம் 2011 ஒக்டோபர் வரை தென் மாகாணத்தில் எதுவித அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இரண்டு சந்தர்ப்பங்களின் போது மேல் மாகாண சபைக்கு வாடகை அடிப்படையில் இவ் இயந்திரங்களை வழங்கி ரூபா 2,489,401 தொகையான விலைப்பட்டியல்கள் வழங்கப்பட்டிருந்தும் 2011 ஒக்டோபர் 17 ஆந் திகதிய கணக்காய்வுத் திகதி வரை இதில் ரூபா 914,465 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. இந்த இயந்திரத்திற்காக அதிகாரசபை பழுதுபார்த்தல்கள், காப்புறுதி, பெறுமானத்தேய்வு என்பன தொடர்பாக 2011 ஒக்டோபர் வரை ரூபா 4,082,401 செலவிடப்பட்டிருந்ததுடன் இதற்கிணங்க இதுவரை அதிகாரசபைக்கு இவ் இயந்திரத்தின் மூலம் ஏற்பட்ட நட்டம் ரூபா 3,167,936 ஆக இருந்தது.

(ஊ) தொழில்நுட்ப அபிவிருத்தி அதிகாரசபையினால் நடாத்தப்பட்ட 2011 "பென்தா வெலந்த செனகெலிய" தொடர்பான வருமானமாக ரூபா 499,780 கிடைத்திருந்த போதிலும் செலவுகளாக ரூபா 2,460,114 இடம்பெற்றிருந்தது. இதற்கிணங்க தொழில்நுட்ப அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 1,960,334 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஏ) 2011 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் போத்தல தச்சுத் தொழில் சேவை நிலையத்தின் தேறிய நட்டம் ரூபா 969,338 ஆக இருந்ததுடன் மீடியாகொட சிவப்புக் களி மண் தயாரிப்பு மற்றும் காட்சிப்படுத்தல் நிலையத்தின் நட்டம் ரூபா 204,598 ஆக இருந்தது. இவ் இரண்டு நிலையங்களிலும் சந்தைப்படுத்தல் மேம்பாட்டிற்காக போதியளவு சந்தைப்படுத்தல் திட்டம் காணப்படவில்லை.

## 2.10 வெளிப்படையான மோசடியான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1979 ஏப்ரல் 02 ஆந் திகதி மாவட்ட சேவை உப ஆசிரியராக சேவையாற்றிவந்த பெண் ஆசிரியர் ஒருவரின் பிறந்த திகதியினை மாற்றம் செய்து 2005 நவம்பர் 14 ஆந் திகதியிலிருந்து 2008 பெப்ரவரி 12 ஆந் திகதி வரை 2 ஆண்டுகள் 03 மாதங்கள் அளவிலான காலம் மோசடியாக ஆசிரியர் சேவையில் ஈடுபட்டு சம்பளமாக ரூபா 459,448 தொகையைப் பெற்றிருந்தார்.

(ஆ) வக்வெல்ல பயிற்சி நிலையத்திற்கு 2009 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 65,298 தொகை அதன் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தரினால் மோசடி செய்யப்பட்டிருந்ததுடன் 2012 மார்ச் 15 ஆந் திகதி வரை அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மொறவக்க வலய அலுவலகத்திற்குச் சொந்தமான மாற/ கின்னலிய மகா வித்தியாலயத்திற்கு சுகாதார மற்றும் உடற்கல்விப் பாடத்திற்காக ஹ1/அங்குனுகொலபெலஸ்ஸ கனிஷ்ட வித்தியாலயத்தில் சேவையாற்றியதாகக் குறிப்பிட்டு ஆசிரியர் ஒருவர் இணைத்துக்கொள்ளப்பட்டு மோசடியான நியமனக் கடிதம் மற்றும் மோசடியான சம்பள விபரத்தினதும் அடிப்படையில் இவ் ஆசிரியருக்கு 2010 யூன் மாதத்திலிருந்து 2011 செப்தெம்பர் மாதம் வரை ரூபா 297,120 தொகை சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் தனிப்பட்ட சேவைகள் எடுத்துவரப்பட்டு உறுதிப்படுத்தாதன் காரணமாக இந் நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஈ) வலஸ்முல்ல வலய கல்விப் பணிப்பாளர் 2009 திசெம்பர் 07 ஆந் திகதியிலிருந்து 2009 திசெம்பர் 14 ஆந் திகதி வரை காய்ச்சலுக்கு கராபிடிய வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றிருந்த போதிலும் தங்கி சிகிச்சை பெற்ற 2009 திசெம்பர் 07, 08 மற்றும் 14 ஆந் திகதிகளில் கடமையாற்றியுள்ளதாக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தில் குறிப்பிட்டு சுகயீன விடுமுறை பெற்றுக்கொண்டிருக்கவில்லை. மேலும் 2009 திசெம்பர் 09, 10 மற்றும் 11 ஆந் திகதிகளில் சுகயீன விடுமுறைக்காக விண்ணப்பப் படிவமானது 2010 ஒக்தோபர் 25 ஆந் திகதியே தென் மாகாண கல்வித் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்திருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2012 மார்ச் 28 ஆந் திகதி வரையும் உரிய அதிகாரியினால் விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வலஸ்முல்ல வலய கல்விப் பணிப்பாளர் 2010 மார்ச் 12 ஆந் திகதியிலிருந்து 2010 திசெம்பர் 19 ஆந் திகதி வரை முறையற்ற கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட ஆங்கில பயிற்சி நெறியின் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொண்டமைக்காக 89 நாட்களுக்கு ரூபா 26,000 தொகையைப் பெற்றுக்கொண்டிருந்ததுடன் அப் படிகளைப்

பெற்றுக்கொண்ட 25 நாட்களுக்கு ஏனைய கடமைகளை நிறைவேற்றியுள்ளமைக்காக பிரயாணச் செலவுகள் மற்றும் விடுமுறை தினச் சம்பளமாக ரூபா 19,314 தொகையும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.11 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வட்டகொட ஆயர்வேத வைத்தியசாலையைத் திருத்தம் செய்து வதிவிட வைத்தியசாலையாக மாற்றுவதற்கு 2003 ஆம் ஆண்டின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் தொடக்க நடவடிக்கையாக நீர் விநியோகத்தை வழங்குவதற்காக குழாய்க் கிணறுகளை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அக் குழாய்க் கிணறுகளை நிர்மாணிப்பதற்கு நீர் வழங்கல் சபை வழங்கியிருந்த ஆலோசனை உரிய முறையில் பின்பற்றப்படாமையின் காரணமாக நீரைப் பயன்பாட்டிற்கு பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. அதற்காகச் செலவு செய்யப்பட்ட ரூபா 427,413 தொகை விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) திஸ்ஸ பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தின் மாமடல மல்பெத்தாவ வீதியில் 05 கிலோ மீற்றர்களை பொரபேஸ் தொழில்நுட்பத்தின் கீழ் மேம்படுத்தப்பட்டிருந்தது. இதன் பராமரிப்புக் காலம் 2009 சனவரி 10 இலிருந்து 2012 சனவரி 12 வரையாகும். இதற்காக 2009 ஒக்தோபர் 27 ஆந் திகதி வரை ரூபா 11,753,880 செலுத்தப்பட்டிருந்தது. இவ் வீதி உரிய ஒப்பந்தக்காரரால் உரிய முறையில் மேற்பார்வை செய்யப்படாததன் காரணமாக பயன்படுத்தப்பட்ட மண் முழுமையாக அகற்றப்பட்டு மீண்டும் ஏபீசீ இட்டு மேம்படுத்துவதற்காக 2010 நவம்பர் 01 ஆந் திகதி 4 வீதி வலையமைப்பின் கீழ் ரூபா 69,461,470 தொகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இந்நிலைமையில் ப்ரோபேஸ் தொழில்நுட்பத்தின் கீழ் வீதியை நிர்மாணிப்பதற்கு செலவுசெய்யப்பட்ட பணம் முழுவதும் விளைவற்றிருந்தது.

(இ) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் 2011 மாகாண குறித்த அபிவிருத்தி மானியத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட கீழே விபரிக்கப்பட்ட வீதிகள் பூர்த்திசெய்யப்படாது நிறுத்திவைக்கப்பட்டிருந்ததனால் உரிய வீதிகளுக்காகச்

செலவுசெய்யப்பட்ட ரூபா 28,764,613 தொகை அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

| **வீதி** | **செய்யப்பட்ட வேலையின் பெறுமதி** | **பூர்த்திசெய்யப்பட்ட திகதி** |
|---|---|---|
| | **ரூபா** | |
| பமுனுகம போகஹ சினிவெல்ல முல | 15,133,574 | 2011-11-07 |
| வெல்லேதொட ஹிதலகம வீதி | 3,333,117 | 2012-01-14 |
| கிவுல பிங்கம வீதி | 10,297,921 | - |

(ஈ) பிரதி செயலாளர் வேலைகள் அலுவலக உதவி செயலாளர் அலுவலகத்தில் பக்கச்சுவரினை நிர்மாணிக்கும் போது மதிப்பீடு செய்யப்பட்ட கொங்கிறீட் லேசர் போடப்படாமை, அத்திவாரத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட ஆழம் உண்மையில் காணப்படாமை, உரிய மாதிரிக்கு இணங்கியவாறு சீமெந்து மணல் கலவை பயன்படுத்தப்படாமை என்பவற்றினால் பக்கச்சுவர் வெடித்திருந்ததற்கு இணங்க நிர்மாணம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,503,500 தொகையான செலவு விளைவற்ற செலவாக மாயிறிருந்தது.

(உ) (i) கோதாகொட திக்கும்புர வீதியை மேம்படுத்துவதற்காக 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 7,368,281 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீண்டும் 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 6,762,540 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வப்போது மேலதிக மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்படுதல் மற்றும் விதியின் ஒரு பகுதி மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டதன் அடிப்படையில் ரூபா 12,335,253 தொகைக்கான வேலைகளின் பெறுமதிக்காக ரூபா 11,877,189 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது 2009 மதிப்பீட்டுப் பெறுமதியின் 82% ஆலான அதிகரிப்பாகும்.

(ii) வீதியின் 0+500 - 1+438 கிலோ மீற்றர் வரையான வீதியை மேம்படுத்துவதற்காக ரூபா 2,523,186 தொகையான செய்த வேலை சான்றுபடுத்தப்பட்டு ரூபா 2,065,122 தொகை ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. வீதிக்கு இரண்டாம் முறை தார்

இடப்படாமையால் மேம்படுத்தப்பட்ட வீதி முழுமையாகச் சேதமுற்றிருந்தது. இந்நிலைமையின் அடிப்படையில் செலுத்தப்பட்ட முழுத்தொகையும் விளைவற்றிருந்தது.

(iii) 2011 ஒக்டோபர் 21 கணக்காய்வுத் திகதி வரையிலும் இவ் வீதியை மீண்டும் மேம்படுத்துவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் இது முழு வீதிக்கும் ஏபீசீ பரப்பப்பட்டு மீண்டும் தயார்படுத்தி காபட் இடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இந்நிலைமையில் இவ் வீதியின் 0+525- 1+500 கிலோமீற்றர் மற்றும் 1+625-1+940 கிலோ மீற்றர் வரையான வீதிப் பகுதிக்கு ப்ரோபேஸ் தொழில்நுட்பத்தின் கீழ் மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முழுத்தொகையும் மேலுள்ள பந்தியில் காட்டப்பட்டவாறு மேற்கொள்ளப்பட்ட ரூபா 11,877,189 தொகையான முழுச் செலவும் விளைவற்ற செலவாக மாறியிருந்தது.

## 2.12 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

2011 நவம்பர் 11 ஆந் திகதியிலிருந்து 25 ஆந் திகதி வரை மெக்சிக்கோ நகரத்தில் நடைபெற்ற சர்வதேச கூட்டுறவுச் சங்கங்களின் வருடாந்த மகாநாட்டில் பங்குபற்றுவதற்காக மூன்று உத்தியோகத்தர்களுக்கு கூட்டுறவு அமைச்சிடமிருந்து ரூபா 1,210,492 தொகை 2011 நவம்பர் 08 ஆந் திகதி இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இவ் வெளிநாட்டுப் பிரயாணத்திற்காக கூட்டுறவு அமைச்சுடன் தொடர்பற்ற உத்தியோகத்தர்களுக்கு ரூபா 403,497 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் அது மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.13 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) (i) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2010 திசெம்பர் 01 மற்றும் 15 ஆந் திகதி மேலதிக சேவை அடிப்படையில் 10 ஆந் தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட இரண்டு சாரதிகள் சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் பதவியணிக்கு இணைத்துக்கொள்ளப்பட்டு தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. 2011 நவம்பர் 30 ஆந் திகதி இவ் இரண்டு பேருக்கான சம்பளமாக ரூபா 448,854 தொகை அதிகாரசபையினால் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அதிகாரசபையின் எக்கடைமையும் அவர்களால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. உரிய அமைச்சரின் செலவுத் தலைப்பிலிருந்து இப்பணம் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 2010 திசெம்பர் 02 ஆந் திகதி செக்ரோல் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியர் ஒருவர் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் பதவியணிக்கு இணைத்துக்கொள்ளப்பட்டு 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 214,705 தொகை அதிகாரசபையால் சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது. உரிய அமைச்சரின் பதவியணிக்கு மேலதிகமாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட இவ் ஊழியரின் சம்பளம் உரிய அமைச்சிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் மாகாண வீதிச் செயற்திட்டத்திற்கும் பயன்படுத்தப்பட்டிருந்த அதிகாரசபையின் மூன்று வாகனங்களிற்காக அதிகாரசபையினால் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவாக ரூபா 1,341,861 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2009 திசெம்பர் 08 ஆந் திகதிய மற்றும் 2010 பெப்ரவரி 13 ஆந் திகதிய தேர்தல்கள் ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் தேர்தல் நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்தின் வளங்கள் முறையற்ற வகையில் பயன்படுத்தப்படலாகாது எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் தென் மாகாண

விவசாய அமைச்சில் அமைச்சரின் அங்கீகரித்த எரிபொருள் அளவை விட 5350 லீற்றர் டீசலும் 380 லீற்றர் பெற்றோலும் தேர்தல் நடவடிக்கைகளுக்காக 2010 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் அண்ணளவான பெறுமதி ரூபா 165,160 ஆகக் காணப்பட்டது.

(ஈ) மாகாண குறித்த அபிவிருத்தி மானியத்தின் கீழ் 2011 திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி ரூபா 967,253 தொகை பயன்படுத்தப்பட்டு மூன்று வகையான மீன் வலைகளைக் கொள்வனவு செய்யும் போது உரிய கொள்வனவு வழிகாட்டிகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 2.14 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) சொத்துக்கள் பொறுப்புக்கள் பதிவேடு

(i) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் தெற்கு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட கடனாகக் காட்டப்பட்டிருந்த ரூபா 5,614,079 தொகையான மீதி பல ஆண்டுகளாகக் காணப்பட்ட மீதியாக இருந்ததுடன் அதனை அறவிடுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்பட்டுள்ள ரூபா 2,667,947 தொகையான மீதிகள் தீர்த்துவைக்கப்படாது பல ஆண்டுகளாகக் காணப்பட்ட மீதிகள் என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) 2009 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக பற்றாக்குறை காணப்பட்டதன் காரணமாக தென் மாகாண சபை நிதியம் படிப்படியாக குறைவடைந்து காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. 2009 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 829,911,570

தொகையாகக் காணப்பட்ட மாகாண நிதிய மீதி 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 249,484,108 வரை 70% ஆல் குறைவடைந்திருந்தது.

(ஆ) நெவுங்கல மற்றும் பிடிகல ஆயுர்வேத மத்திய மருந்தகம் அமைந்துள்ள காணியை ஆயர்வேத திணைக்களத்திற்கு உரித்தாக்கிக் கொள்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தென் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் 15 அமைய ஊழியர்கள் தொடர்பாக இரண்டு ஆண்டுகளில் செலுத்தவேண்டிய ரூபா 611,902 தொகை மற்றும் 12% ஆன தொழில் தருனரின் பங்களிப்பு பணம் சேமலாப நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்தின் உலர் வலய தாவரவியல் பூங்கா அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான இயந்திரங்களை வழங்குவது தொடர்பாக 2010 மே இலிருந்து செப்தெம்பர் வரை அதிகாரசபைக்கு கிடைக்கவேண்டிய ரூபா 587,117 தொகை 2011 திசெம்பர் வரை கிடைத்திருக்கவில்லை.

(உ) 2010 ஆம் ஆண்டின் போது வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 52,500,000 தொகை பிரதான செயலாளர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,824,050 மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது. மிகுதிப்பணமாகிய ரூபா 49,675,950 தொகை 2011 யூலை மாதம் வரை பொதுவைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(ஊ) தென் மாகாண பிரதான செயலாளர் அலுவல வக்வெல்ல முகாமைத்துவ பயிற்சி நிறுவனம் அமைந்துள்ள 3½ ஏக்கர் அளவான காணியின் உரிமை பிரதான செயலாளருக்கு உரித்தல்லாத போதிலும் அதன் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான கட்டிடங்களை நிர்மாணித்தல் உள்ளடங்கலான அனைத்து செலவுகளும் ஆரம்பத்திலிருந்து பிரதான செயலாளரின் செலவுத் தலைப்பிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(எ) லுணம ரணவிரு கிராமத்தின் உள்ளக நுழைவு வீதியினை மறுசீரமைப்பதற்காக 2010 தென் மாகாண சபை குறித்தபணி அடிப்படையிலான மானியத்தின் கீழ் ரூபா 364,650 உடன்படிக்கை பெறுமதி லுணம வடக்கு கிராமிய அபிவிருத்திச் சங்கத்திற்கு

ஒப்படைக்கப்பட்டு ஒப்பந்தக்காரச் சங்கத்திற்கு ரூபா 264,632 செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பான பௌதீக பரிசோதனையின் போது ஒரு கிலோ மீற்றர் அளவான துாரத்திற்கு பயன்படுத்தப்பட்ட கிரவல் உரிய தரமின்றி சேற்றுடன் கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) தென் மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், காலி மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், மாத்தறை மாவட்டம் என்பவற்றை நடாத்துவதற்காக நிரந்தரக் கட்டிடம் இல்லாததன் காரணமாக 2011 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் ரூபா 996,000 தொகை கட்டிட வாடகையாக தனியார் துறையினருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) தங்காலை வலயக் கல்வி அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து இணைத்துக்கொள்ளப்பட்ட இரண்டு ஆசிரியர்களுக்கு 2011 ஆம் ஆண்டில் ரூபா 497,982 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் செலுத்தப்பட்ட சம்பளத்தை மீளளிப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) ஒரு நாளைக்கு சராசரியாக வசிக்கும் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை 50 இனை மிகைத்திருந்த கிதுலம்பிட்டிய செனஹச சிறுவர் இல்லத்தில் பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தின் சேவை சுழற்சியினைப் பரீட்சித்த போது சில சேவை நிலையங்களுக்காக இரண்டு வேலையாளர் ஊழியர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் 2011 ஆம் ஆண்டின் போது சிறுவர் இல்லங்களின் 13 சிறுவர்கள் மதிலால் பாய்ந்து சென்றிருந்ததுடன் சிறுவர்கள் சுகவீனமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது பாதுகாப்பிற்காக நிற்பதற்கு ஊழியர்கள் இல்லாதிருந்ததன் காரணமாக சிறுவர்கள் மரணமடைந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அவ்வாறே ஒழுக்காற்று விசாரணைக்கு உட்பட்ட ஹல்பாதொட நன்னடத்தை இல்லத்திற்கு மாற்றம் செய்து அனுப்பிவைக்கப்பட்டுள்ள முன்னாள் மேற்பார்வையாளர் பலாத்காரமாக சிறுவர் இல்லத்தின் உத்தியோகபூர்வ விடுதியில் தொடர்ந்தும் குடியிருப்பதன் காரணமாக தற்பொழுது நிலையத்திற்குப் பொறுப்பான மேற்பார்வையாளர் சேவையை இரவு வேளையில் பெற்றுக்கொள்ள முடியாமை வெளிப்பட்டது.

(ஓ) ஹிக்கடுவ சான்றுபடுத்திய பாடசாலையின் தச்சுவேலை மின்சாரம், உருக்குவேலை, மேசன் தொழில் பிரிவுகள் காணப்பட்டதுடன் தற்பொழுது தச்சுவேலைப் பிரிவு மற்றும் மின்சாரப் பிரிவு மட்டும்

செயற்பட்டு வருவது அவதானிக்கப்பட்டதுடன் மேசன் வேலைப் பிரிவு செயற்படாதிருந்ததனைப் போல் உருக்கு வேலைப் பிரிவும் 2007 ஆம் ஆண்டிலிருந்து செயற்படாதிருந்தது. தற்பொழுது செயற்படும் நிலையிலுள்ள தச்சுவேலைப் பிரிவில் பயிற்சிகளைப் பெறும் பிள்ளைகளின் தொழில் வாய்ப்பினை அதிகரிப்பதற்கு போதியளவான மூலப்பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது.

(ஓ) தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் பெருந்தோட்ட ஜனகலா நிலையத்தில் நடாத்தப்பட்டு வருகின்ற 10 விற்பனைக் கூடங்களில் 07 விற்பனை கூடங்கள் மூடப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக ரூபா 1,115,400 தொகை அதிகாரசபையினால் இழக்கப்பட்டிருந்தது. 04 விற்பனை கூடங்களை 2011 ஆம் ஆண்டில் குத்தகைக்கு வழங்குதல் தாமதித்ததன் காரணமாக அதிகாரசபை ரூபா 178,200 தொகையான வாடகை வருமானத்தினை இழந்திருந்தது. மேலும் உரிய விற்பனை கூடங்களின் குத்தகைதாரர்களுடன் அதிகாரசபை கையெழுத்திட்ட உடன்படிக்கையில் குத்தகை வாடகை தாமதிக்கையில் எடுக்கவேண்டிய நடவடிக்கை தொடர்பாக எதுவித குறிப்பும் இல்லாததன் காரணமாக குத்தகைதாரர்கள் குத்தகை வாடகையினைத் தாமதித்திருந்தும் அதிகாரசபையினால் எடுக்கக்கூடிய நடவடிக்கை இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஔ) விளையாட்டு நிதியத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டுப் பொருட்களுக்கு பொறுப்பாக இருந்த தற்போதைய களஞ்சிய உத்தியோகத்தருக்கு அவருக்கு முன்னர் களஞ்சியத்திற்குப் பொறுப்பாக இருந்த உத்தியோகத்தரினால் ஒப்படைக்கப்பட்ட 59 வகைகளைச் சார்ந்த 902 விளையாட்டுப் பொருட்களையும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 257,171 பெறுமதியான 10 வகைகளைச் சார்ந்த 369 விளையாட்டுப் பொருட்களையும் 2012 மே 14 ஆந் திகதி வரை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஃ) தென் மாகாணத்தின் 1990 இன் 01 ஆம் இலக்க விளையாட்டுக்கள் நியதிச்சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் தென் மாகாணத்தில் விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தலே இந் நிதியத்தின் குறிக்கோளாகும். இக்குறிக்கோளை அடைந்துகொள்வது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஏற்பாடாக ரூபா 7,554,232 தொகை கிடைத்திருந்ததுடன் ஆண்டின்

போது வெளிநாட்டு விளையாட்டுப் போட்டிகளுக்காக பங்குபற்றுபவர்களுக்கு உதவி வழங்குதல் மற்றும் விளையாட்டுச் சங்கங்களுக்கு உதவி வழங்கல் தொடர்பாக அதில் 37% ஆனவை செலவு செய்யப்பட்டிருந்தது.

(க) மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு 2011 ஆம் ஆண்டின் போது சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 549,945 தொகை உரிய ஆண்டிற்குள் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படாமையால் திருப்பி அனுப்பப்பட்டது.

## 2.15 சொத்துக்கள் முகாமைத்துவம்

தென் மாகாண சபையின் தென் மாகாண வறுமை ஒழிப்பிற்கான சுழற்சி நிதியத்திற்கு கடன் வழங்குவதற்காக கிடைத்திருந்த பணத்தில் ரூபா 73,040,113 தொகை அச்செயற்பாட்டிற்குப் பயன்படுத்தப்படாது பிரதான செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இப்பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2011 திசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வட்டியுடனான மொத்தப் பெறுமதி ரூபா 86,632,387 ஆக இருந்ததுடன் அதனை ஆக்கபூர்வமாக செயற்திட்டத்தில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.16 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கடந்த 7 ஆண்டுகளில் (2005 -2011) தென் மாகாண அபிவிருத்தி திட்டம்-குறித்தபணிக்கான செயற்திட்டம் தொடர்பான பரிசோதனையின் போது புதிய செயற்திட்டங்களுக்காக விடுவிக்கப்பட்ட ரூபா 846,405,325 தொகையில் ரூபா 520,485,023 தொகை அல்லது 61 சதவீதமும் தொடர்ச்சியான வேலைகளுக்காக விடுவிக்கப்பட்ட ரூபா 20,148,721 தொகையில் ரூபா 16,330,840 தொகை அல்லது 81 சதவீதமும் செலவு செய்யப்பட்டிருந்தது.

(ii) 7 ஆண்டுகளுக்குள் அங்கீகரிக்கப்பட்டிருந்த 8,357 புதிய செயற்திட்டங்களில் 2,420 செயற்திட்டங்களினதும் அங்கீகரிக்கப்பட்ட தொடர்ச்சியான 296 செயற்திட்டங்களில் 39 செயற்திட்டங்களினதும் வேலைகள் உரிய ஆண்டுகளில் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அக்காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட 8357 புதிய செயற்திட்டங்களில் 2,300 செயற்திட்டங்களும் தொடர்ச்சியான 4,499 வேலைகளில் 19 வேலைகளும் திசெம்பர் 31 ஆந் திகதியில் வேலைகளைப் பூர்த்திசெய்திருக்கவில்லை.

(iv) தென் மாகாணத்தின் வறுமை ஒழிப்புக்கான சுழற்சி நிதியத்தின் கீழ் 20 ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கியிருந்து திருப்பிச் செலுத்தும் காலம் 3 ஆண்டுகளான கடன் பணத்தில் ரூபா 38,126,464 தொகை இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(v) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாணவர்களின் எண்ணிக்கை 50 இற்கு குறைவான பாடசாலைகள் தங்காலை வலயத்தில் 13 ஆகவும் வலஸ்முல்ல வலயத்தில் 10 ஆகவும் ஹம்பாந்தோட்டை வலயத்தில் 10 ஆகவும் காணப்பட்டது.

**2.16.1 அரசாங்க மானியம்**

மாகாண சபை அபிவிருத்தி வேலைப் பிரேரணைகளுக்குக்கிடைத்த நிதி ஏற்பாடுகளும் செலவுசெய்தல்களும் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| **தோற்றுவாய்** | **நிதிஏற்பாடு** | **செலவுகள்** | |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | |
| பருமனளவு அடிப்படையிலான மானியம் | 292,000,000 | 691,650,457 | கடந்த ஆணடுகளில் மிகுதிப் பணம் செலவு செய்யப்பட்டிருந்தது. |
| மாகாண குறித்த அபிவிருத்தி மானியம் | 1,207,500,000 | 1,264,289,000 | |
| திரண்ட மானியம் | 11,759,940,000 | 14,402,060,964 | |
| ஏனைய மானியம் | 145,171,685 | 187,346,726 | |

**2.16.2 மாகாண அபிவிருத்தி திட்டம்**

மீளாய்வாண்டிற்காக மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதிய வேலை மற்றும் தொடர்ச்சியான வேலைகளின் கீழ் ரூபா 1,644,671,088 பெறுமதியான 4,874 வேலைப் பிரேரணைகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் வேலைப் பிரேரணைகளின் செயல்முன்னேற்றம் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றது.

| | | புதிய வேலை | தொடர்ச்சியான வேலை | மொத்த வேலைப் பிரேரணைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்டவை | 3,566 | 245 | 3,811 |
| (ஆ) | 50% இனை விட குறைவாகப் பூர்த்திசெய்யப்பட்டவை | 897 | 24 | 921 |
| (இ) | ஆரம்பிக்கப்படாதவை | 411 | 05 | 416 |
| | மொத்தம் | 4,874 | 274 | 5,148 |

## 2.17 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**2.17.1** உடுகம மாவட்ட வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை கூட்டத்தினை நிர்மாணிப்பதற்காக ரூபா 6,800,000 தொகை உலக வங்கி உதவியின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் வேலையினை ஆரம்பித்தல் திகதி 2010 யூலை 08 ஆந் திகதியாகும். முடிவுத் திகதி 2010 நவம்பர் 06 ஆந் திகதியாகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உரிய துறையின் வேலைகள் ஒரு வருடம் தாமதித்து 2011 யூலை 26 ஆந் திகதி பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விலைப்பட்டியல்களின் பிரகாரம் பூர்த்திசெய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 5,468,843 ஆக இருந்ததுடன் 2010 திசெம்பர் மாதம் காலி மாவட்ட பொறியியலாளரினால் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் செய்த வேலைகளின் பெறுமதி ரூபா 6,533,367 ஆக இருந்தது. இதில் விலைப்பட்டியல்களின் பிரகாரம் மேலதிக மற்றும் புற வேலைகளின் பெறுமதி ரூபா 1,939,147 ஆக இருந்ததுடன் மாவட்ட பொறியியலாளரின் அங்கீகாரம் வேண்டப்பட்டிருந்த கடிதத்தின் பிரகாரம் மேலதிக மற்றும் புறவேலைகளின் பெறுமதி ரூபா 2,606,446 ஆக இருந்தது.

(இ) இம் மதிப்பீடு அடிக்கடி திருத்தம் செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 6,031,000 தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட பணம் ரூபா 7,286,074 வரை 20% ஆல் அதிகரித்திருந்தது.

(ஈ) சத்திரசிகிச்சை கூடத்தின் பௌதீக பரிசோதனையின் போது சுவர் வெடித்து 07 தரை ஓடுகள் (Wall title) வெடித்திருந்தமையும், குளிரூட்டல் முறைமை செயற்படுத்த முடியாதவகையில் கதவுகளில் இடைவெளிகளும் ஏனைய குறைபாடுகளும் காணப்பட்டமையும் F-2 செலவு விடயத்தின் கீழ் பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள 6x4 அங்குல சட்டங்களுக்குப் பதிலாக 6x3 அங்குல இரும்புத் தூண்கள் பயன்படுத்தப்பட்டிருந்தமையும் கூரையில் முகடுகள் கட்டும்போது அது முறைப்படியாக நிறைவேற்றப்படாததன் காரணமாக மழை நீர் கசிவதனைத் தவிர்ப்பதற்காக பயன்படுத்தி மூடப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(உ) மேலதிக வேலை விடயம் இலக்கம் Ex-4 இன் கீழ் பொருத்தப்பட்டுள்ள 63 எம்பியர் பகிர்ந்தளிக்கும் பலகையின் பெறுமதியான ரூபா 145,710 தொகை வருவிக்கப்பட்ட முறைமை தெளிவில்லாதிருந்தது.

**2.17.2** பெலியத்த ஆயர்வேத வைத்தியசாலையில் மருந்து உற்பத்திசாலையின் அரிஷ்த பிரிவில் கட்டிடத்தை விஸ்தரிக்கும் வேலை ரூபா 1,183,883

பெறுமதிக்கு நிர்மாண நிறுவனம் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதற்கிணங்க நிலத்திற்கு சீமெந்து போடுதல் அவர்களால் செய்யப்பட்டிருந்த போதிலும் அது வெடித்திருந்ததன் காரணமாக இரண்டாவது தடவையும் நிலத்திற்கு சீமெந்து போடப்பட்டிருந்தது. இரண்டாவது தடவை செய்யப்பட்ட அச் செயற்பாடு தொடர்பாக 2011 நவம்பர் 17 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது நிலம் மீண்டும் வெடித்திருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

**2.17.3** தங்கல்லை பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்குரிய நிஹிலுவ-ஓகெவெல வீதியில் 3+375 - 3+441 கிலோ மீற்றர் பகுதியினை மேம்படுத்துவதற்காக ரூபா 549,481 தொகைக்கு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. வேலை 2010 நவம்பர் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2011 பெப்ரவரி 28 ஆந் திகதி பூர்த்திசெய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. திட்டத்தின் பிரகாரம் உரிய கனஅளவில் வீதி நிர்மாணிக்கப்படாதிருந்தமை 2011 திசெம்பர் 09 ஆந் திகதி வீதிகளை பரிசோதனை செய்தபோது வெளிப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க ஒப்பந்தக்காரருக்கு ரூபா 32,487 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் உரிய தரத்தில் வீதி நிர்மாணிக்கப்படாததன் காரணமாக அதன் நீண்டகால நிலைத்திருக்கும் நிலை நிச்சயமற்றதாக இருந்தது.

**2.17.4** (i) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கதலுவ-தித்தகல்ல வீதியை நிர்மாணிக்கும் போது 0+000-5+000 கிலோமீற்றர் வரை 5 கிலோ மீற்றர்களை மேம்படுத்துவதற்காக ரூபா 8,152,626 தொகையான வேலை மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 7,118,474 தொகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. வேலையின் ஆரம்பிப்பு மற்றும் முடிவு திகதி 2009 செப்தெம்பர் 24 மற்றும் 2010 சனவரி 22 ஆகும். 2009 செப்தெம்பர் 24 ஆந் திகதிக்கு முன்னர் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் 2009 திசெம்பர் 22 ஆந் திகதியே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2010 நவம்பர் 02 ஆந் திகதி வரை 8 சந்தர்ப்பங்களில் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது. 2011 ஒக்தோபர் 21 ஆந் திகதிய கணக்காய்வு திகதி வரை வேலை பூர்த்திசெய்யப்பட்டமைக்கான சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வீதியின் அடிமட்டப்பகுதியில் பலவீனமான இடங்களை வலுப்படுத்தும் குறிக்கோளுடன் வீதியை மேம்படுத்துவதற்காகத் திட்டமிடப்பட்டு திட்டத்தின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும்

நிர்மாணங்களை உரிய திட்டத்திற்கு இணங்க பூர்த்திசெய்யாமையின் காரணமாக ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 1,685,248 தொகை தொடர்பாக திருப்தி கொள்ளமுடியாதிருந்தது.

(iii) அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.8 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தப் பெறுமதியில் 5% ஆன பெறுமதிக்குச் சமமான செயலாற்றல் பிணைமுறி பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இதில் ஒப்பந்த பெறுமதியில் 3% ஆன செயலாற்றல் பிணை முறியே பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் உரிய நிறுவனத் தலைவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிறுவன நடவடிக்கைகள்
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) வளங்களின் பயன்பாடு
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) சொத்துக்கள் முகாமைத்துவம்